செய்தி வெளியீடு எண். 79 நாள்: 03.02.2018

**டாம்கோ திட்டத்தின் கீழ் சிறுபான்மையினருக்கு கடன் திருவிழா (Loan Mela) 07.02.2018 அன்று நடைபெறவுள்ளது - மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

திருவள்ளூர் மாவட்டத்தில் டாம்கோ திட்டத்தின் கீழ் சிறுபான்மையினருக்கு கடன் வழங்குவதற்காக கடன் திருவிழா (Loan Mela) காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கியின் சார்பாக வரும் 07.02.2018 (புதன்கிழமை) அன்று காலை 10 மணிக்கு ஆவடி எம்.டி.எச் சாலையில் அமைந்துள்ள எஸ்.பி. அன்னபூர்ணா திருமண மண்டபத்தில் நடைபெறள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கிறார்.

மேற்படி கடன் திருவிழாவில் இஸ்லாமியர்கள், கிருத்துவர்கள், சீக்கியர்கள், புத்தமதத்தினர், பார்சியர்கள் மற்றும் ஜெயின் பிரிவை சார்ந்த சிறுபான்மையினர்கள் கடன் தொடர்பான இனச் சான்றிதழ் நகல், வருமான சான்றிதழ் நகல், குடும்ப அட்டை நகல், வாக்காளர் அட்டை நகல், ஆதார் அட்டை நகல், தொழில் திட்ட அறிக்கை, பாஸ்போர்ட் அளவிலான புகைப்படம் (ஒன்று) ஆகியவற்றுடன் கலந்து கொண்டு பொருளாதார மேம்பாட்டு கடன் பெற்று பயனடைய வேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொள்கிறார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**